**அசல் வழக்கு எண். 35/2021**

12.11.2025

**பெயர் – அழகுதுரை** (PW2)

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். வழக்கின் வாதி எனது மனைவி என்றால் சரிதான். நான் சொல்லி தான் பிரமாண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது. நடைபாதையில் குறுக்கீடு செய்யக்கூடாது என்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் ஜெகநாதன், ஜெயலட்சுமி வீட்டிற்கு மேற்கு புறம் எங்கள் வீடு உள்ளது என்றால் சரிதான். அவர்கள் வீட்டிற்கும், எங்கள் வீட்டிற்கும் தென்வடல் பொது சந்து உள்ளது என்றால் சரியல்ல அந்த இடம் எங்களுக்கு பாத்தியப்பட்டது. பிரதிவாதிகள் வீடு உடுமலை – கொழுமம் ரோட்டை ஒட்டி பிரதிவாதிகள் வீடும் அதற்கு மேற்கு புறம் எங்கள் வீடும் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகள் ஜெகநாதன், ஜெயலட்சுமி வீட்டிற்கு ஒட்டி மாரிமுத்து என்பவர் வீடு உள்ளது அதற்கு மேற்கு புறம் தான் எங்கள் வீடு உள்ளது.

(2) பிரதிவாதிகள் கிரைய பத்திரத்தை நான் பார்த்துள்ளேன். அந்த பத்திரத்தில் தென்வடல் பொதுப்பாதை கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கிழபுறம் உள்ள உடுமலை செல்லும் பாதையை கண்டு தான் எழுதப்பட்டுள்ளது. அசல் வழக்கு எண். 346/2011 என்ற வழக்கை 1ம் பிரதிவாதி எனது மனைவி மீது தாக்கல் செய்தார் என்றால் சரிதான். தென்வடல் பொதுப்பாதையை பொறுத்து தொந்தரவு செய்யக்கூடாது என்று உறுத்துக்கட்டளை பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த விவரத்தை மறைத்து தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தென்வடல் பொதுப்பாதை பேரூராட்சிக்கு சொந்தமானது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்ததாக பேரூராட்சியில் புகார் அளித்தேன் என்றால் சரிதான். பேரூராட்சியில் பிரதிவாதிகள் தங்களிடம் நீதிமன்ற உத்திரவிற்கு கட்டுப்படுவதாக எழுதி கொடுத்துள்ளதாக

சொன்னார்கள். தாவாச் சொத்தையும், பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்யததாக சொல்லப்படும் இடத்தையும் நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் உள்ள விவரங்களை படித்துப் பார்த்தேன். ஆணையர் அறிக்கையில் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்று சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல பிரதிவாதிகளுக்கு கிழபுறம் செல்ல பாதை உள்ளதாக சொல்லியுள்ளார்.

(3) தாவாவில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரம் எங்களது மூன்று பத்திரங்களை பார்த்து அதன்படி குறிப்பிட்டுள்ளோம். சாட்சியிடம் வாதுரை காட்டி கேள்வி கேட்கப்பட்டது. தாவா பி செட்யூல் சொத்து விவரத்தில் கிழமேல் ரோட்டில் இருந்து நேர் தெற்கு முகமாக உள்ள பொது சந்தின் வழியாக போய் வந்து கொள்ளும் தட பாத்தியமும் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான் இந்த வழக்கு சம்மந்தமான வீட்டிற்கு மேற்கு புறம் இரண்டு வீடுகள் நாங்கள் வாங்கியுள்ளோம் அந்த வீடுகளுக்கு சென்று வருவதற்கு இந்த சந்து பொது சந்து என்று குறிப்பிட்டுள்ளோம். இது சம்மந்தமாக கொமரலிங்கம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம் நீதிமன்றத்திற்கு சென்று பரிகாரம் தேடிக்கொள்ள அறிவுறுத்தினார்கள். அந்த சந்து பொது சந்து என்றும் எங்களுக்கு சொந்தமான சந்து அல்ல என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2025.11.12 19:19:08 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்